தொழில் உரிமங்கள்.

* வினா எண். 37—திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 31-3-1981 ஆம் தேதியன்று மத்திய அரசின் அனுமதி பெறுவதற்காக நிலுவையில் உள்ள தொழில் உரிமங்களின் எண்ணிக்கை யாது?

(ஆ) இம் முறையினை துரிதப்படுத்த மாநில அரசு நடவடிக்கை ஏதேனும் மேற்கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது?

* வினா எண். 38—திரு மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980—1981-ம் ஆண்டுகளில் அரசால் எத்தனை கனரக தொழிற்சாலைகள் தொடங்க உரிமம் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அரசு பரிந்துரைத்த அனைத்து கனரக தொழிற்சாலைகளுக்கும் மத்திய அரசால் அங்கீகாரம் அளிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, (அ) 31-5-1982 வரையில் 65. ஆனால், 6-9-1982 முடிய 20.

(ஆ) மற்றும் (இ): மாநில அரசால் பரிந்துரை செய்யப்பட்டு மைய அரசின் முடிவை எதிர்நோக்கியுள்ள விண்ணப்பங்களைப் பற்றி தமிழக தொழில் துறை அதிகாரிகள் அங்கே சென்று வலியுறுத்துகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதங்கள் மூலம் தொடர்பு கொண்டும், நேரில் செல்கிறபோதும் மைய அமைச்சர்களைச் சந்தித்துச் சொல்கிறார்கள். தொழில் அமைச்சர் என்ற முறையில் நானும் மாண்புமிகு மைய அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்தும், கடிதங்கள் மூலமும் வலியுறுத்தி வருகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, ஒரு சப்மிஷன். இப்படிப்பட்ட கேள்விகளுக்கு அமைச்சரவர்கள் ஒரு விவரமான அறிக்கையை அவையில் வைத்தால் அதை உறுப்பினர்கள் பார்த்துவிட்டு, துணைக் கேள்விகள் கேட்க வசதியாக இருக்கும். வெறுமனே எண்ணிக்கையை மட்டும் சொல்லிவிட்டால் எப்படி மற்ற விவரங்களைத் தெரிந்துகொள்வது? ஆகவே, இனிமேலாவது இப்படிப்பட்ட வினாக்களுக்கு விவர அறிக்கை வைக்கும்படி தலைவரவர்கள் டைரக்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.